**DEPOSITION OF WITNESS**

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti**

**Case No. STC - 594/2023**

**Deposition of Witness for Prosecution : D.W. 1**

| | | | |
|---|---|---|---|
| Name | : **மணிகண்டன்** | Caste | : |
| Father/Husband Name | : **சுப்பிரமணி** | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Complainant Absent. Petition filed and Allowed. Accused Present)**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 12.02.2025**

**குறுக்கு விசாரணை**

நான் டிப்ளமோ சிவில் படித்துள்ளேன். என்னிடம் டிரைவிங் லைசன்ஸ் உள்ளது. எனக்கு கார் ஓட்டும் பழக்கம் உள்ளது. என்னிடம் கனரக வாகன ஓட்டுவதற்கான ஓட்டுநர் உரிமம் உள்ளது. கனரக வாகனம் ஓட்ட தெரியாது. வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் கடந்த 2012 ஆம் ஆண்டு டிப்ளமோ படித்து முடித்தேன். அதன்பிறகு இரண்டு வருடங்கள் சும்மாதான் இருந்தேன். அதன்பின்பு ஒப்பந்த வேலை செய்து வந்தேன். கோயம்புத்தூரில் AVR கன்ஸ்டிரக்சன் சப்-கான்டிராக்ட் வேலை பார்தேனா என்றால் இல்லை. நான் கேரளாவில் சப்-கான்டிராக்ட் வேலை செய்தேன். கடந்த 27.01.2023 ஆம் தேதி முதல் 6 மாதங்கள் கேரளாவில் சப்-கான்டிராக்ட் வேலை செய்து வந்தேன். 2023 ஆம் ஆண்டு ஜீலை 31 வரை வேலை பார்த்தேன். அதற்கு முன்பு திருப்பூரில் சூப்பர்வைஸ்ரராக வேலை செய்தேன்.

2021 மற்றும் 2022 வரை வேலை செய்தேன். 2014 முதல் 2021 வரை கிருஷ்ணகிரி, சேலம் ஆகிய இடங்களில் வேலை பார்த்தேன். மேற்படி இடங்களில் PWD மற்றும் TWAD சம்பந்தமான வேலைகளை எனது சித்தப்பா அண்ணாமலை ஆர். வெள்ளையன் என்ற பெயரில் ஒப்பந்தம் எடுத்து செய்து வந்ததில் அவருக்கு நான் ஒத்தாசையாக சூப்பர்வைஸ்ர் வேலை செய்து வந்தேன். PWD முதல் நிலை ஒப்பந்தகாரர் மேற்படி வெள்ளையன் ஆவார். அவரை விசாரித்தால் நான் அவரிடம் வேலை செய்தேனா இல்லையா என்று தெரியவரும். அங்கு வேலை பார்த்ததற்கு என்னிடம் சான்றிதழ் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. கோயம்புத்தூரில் KVR கன்ஸ்டிரக்சன் எங்கு உள்ளது என்றால் எனக்கு தெரியாது. KVR கன்ஸ்டிரக்சன் நிறுவனம் திண்டுக்கலில் உள்ளது என்றால் தெரியாது. மேற்படி KVR கன்ஸ்டிரக்சனில் நான் கோயம்புத்தூரில் 3 ஆண்டுகள் வேலை செய்தேன் என்றாலும் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மேற்படி கோயம்புத்தூரில் வேலை செய்தபோது புகார்தாரரிடம் பழக்கம் ஏற்பட்டு அவரிடம் வழக்கு தொகையை கடனாக பெற்றேன் என்றால் சரியல்ல. கேரளாவில் கோழிகூடு மாவட்டத்தில் புதுப்பாடி பஞ்சாயத்தில் ஜல்- ஜீவன் திட்டத்தில் HDPE என்ற நிறுவனத்தில் பைப் லைன் லேபர்- கான்டிராக்ட்படி வேலை செய்தேன். என்னுடைய பதில் அறிவிப்பில் மேற்படி கேரளாவில் வேலை பார்த்த விபரத்தை சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்போது வழக்கறிஞரிடம் நான் கேரளாவில் வேலை பார்த்த விபரத்தை சொன்னேனா என்றால் போன்மூலம் வழக்கறிஞரிடம் தகவல் சொன்னேன். நான் கேரளாவில் வேலை பார்த்த 6 மாதத்தில் 2 முறை என் சொந்த ஊருக்கு வந்துள்ளேன். வழக்கறிஞர்

ரமேஷ்பாபு அனுப்பிய அறிவிப்பை யார் வாங்கினார்கள் என்றால் அந்த அறிவிப்பு எங்கள் ஊர் தபால் நிலையத்திற்கு வந்தது. அங்கியிருந்து எனக்கு அனுப்பப்பட்டது. அந்த தபால்நிலைய தபால்காரரை விசாரித்தால் மேற்படி விபரம் தெரியும் என்றால் சரிதான். அதற்கு பதில் எனது வழக்கறிஞரிடம் போன்மூலும் தெரிவித்தேன். வழக்கறிஞர் அறிவிப்பில் நான் கையெழுத்து செய்தேனா என்றால் ஞாபகம் இல்லை. எனது வழக்கறிஞரின் அலுவலகம் திருப்பூரில் உள்ளது. போன்முலும் நான் சொன்ன தகவலை வைத்து எனது வழக்கறிஞர் பதில் அறிவிப்பு அனுப்பினார். அதில் உள்ள விபரங்கள் தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. புகார்தாரர் யார் என்று தெரியாது என்று எனது வழக்கறிஞரிடம் சொன்னேன். புகார்தாரர் மீது அந்த சமயத்தில் நான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த முகவரில் புகார்தாரர் உள்ளாரா என்று நான் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே பணம் வாங்காமல் இருந்திருந்தால் புகார்தாரர் மீது மோசடியாக பணம் கேட்டு அறிவிப்பு அனுப்பியதாக புகார் கொடுத்திருப்பேன் என்றாலும் நான் பலபேரிடம் இதுபோல் பணம் வாங்கியுள்ளதால் நான் புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. நான் கேரளாவில் இருந்ததால் புகார் அளிக்கவில்லை. தாபலிலும் Online மூலமும் ஏன் புகார் அளிக்கவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் புகார்தாரரிடம் பணம் வாங்கியிருந்தால்தான் அவரின் அறிவிப்பிற்கு புகார் எதுவும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. 18.04.2023 அன்று வழக்கறிஞர் ரமேஷ்பாபு எனக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு புகார்தாரர் மீது நான் ஏன் புகார் அளிக்கவில்லை என்றால் பதில் அறிவிப்பு அனுப்பினேன். புகார்தாரர் யார் என்று தெரியாததால் அவர் மீது ஏன் புகார்

அளிக்கவில்லை என்றால் பதில் அறிவிப்பு அனுப்பியதால் புகார் எதுவும் அளிக்கவில்லை. 21.06.2023 ஆம் தேதியிட்ட புகார்தாரர் வழக்கறிஞர் அறிவிப்பு வரும்வரை இடையிலான 70 நாட்களில் முதல் அறிவிப்பின் புகார்தாரர் வாசிமலை மீது ஏன் புகார் அளிக்கவில்லை என்றால் பதில் அறிவிப்பு அனுப்பினோம் அதற்கு அவரிடமிருந்து பதில் எதுவும் இல்லை. அதனால் புகார் அளிக்கவில்லை.

**(புகார்தாரின் வழக்கறிஞர் கோரிக்கையின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**